**பல்வேறுபட்ட இயற்கை அம்சங்களைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் இயற்கை சமநிலையை ஏற்படுத்துவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்" என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.**

"இன்றைய தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நிகழ்ந்த உலக சுற்றாடல் தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யாழ்ப்பாணக் குடாநாடு பல்வேறுபட்ட இயற்கை அம்சங்களைக் கொண்ட விசேட சிறப்பம்சங்களையுடைய ஒரு குடாநாடாகும். குறிப்பாக கடற்கரை, மணல் திட்டுகள், பல்வகை உயிரினங்கள் வாழக்கூடிய கடும் காடுகள், நீர் ஏரிகள் என பல்வேறு தரப்பட்ட வகையான விசேஷமான சிறப்பம்சங்களை கொண்ட எமது குடாநாட்டில் நாங்கள் வசித்து வருகின்றோம். இதனை நாங்கள் மேலும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை நாங்கள் ஒவ்வொருவரும் நமது கையில் எடுக்க வேண்டும்.

இன்றைய தினத்தில் இந்த சுற்றாடல் தினத்தை நினைவு கூறல் மட்டுமல்லாது யாழ் மாவட்டத்தில் சூழல் சமநிலையினையும் பாதுகாக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை நாம் இன்றைய தினம் எடுப்பதோடு இது அனைவருடைய பொறுப்பாகும்" என கருத்து தெரிவித்த அரச அதிபர், 1972 ஆம் ஆண்டிற்கு பின் தொடர்ச்சியாக சர்வதேச சுற்றாடல்தினம் ஐ. நா. சுற்றாடல் நிறுவனத்தினரால் வருடாவருடம் ஒரு விழிப்புணர்வு நிகழ்வாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வு ஏன் நடைமுறைப்படுத்தப்பட்டது என்றால் இயற்கையிலிருந்து தான் நாங்கள் பல்வேறுபட்ட வளங்களை பெற்றுக் கொள்கிறோம். ஆரம்ப காலத்திலே கைத்தொழில் புரட்சி, பசுமைப் புரட்சி, பல்வேறுபட்ட புரட்சிகள் நடந்து தற்பொழுது உலக நாடுகள் பல்வேறுபட்ட விருத்தியடைந்து இப்போது அனைத்து வளங்களையும் இந்த இயற்கையிலிருந்து நாம் பெற்றுக்கொள்கின்றோம். எனினும் இயற்கை சமநிலையை பேணுவதை தவிர்த்துவிட்டோம்.

இந்த முறை உலக சுற்றாடல் தினத்தினை இரண்டு கருப்பொருட்களை மையமாக வைத்து நாங்கள் கொண்டாடுகின்றோம் உலக கருப்பொருள் என்னவென்றால் "இயற்கைக்கான தருணம்" அதேபோல் இலங்கையில் கருப்பொருள் "உயிரியல் பல்வகைமையின் முக்கியத்துவத்தை சூழலுக்கு வழங்குதல் " ஆகும். எனவே அனைவரும் இதனுடைய முக்கியத்துவத்தினை உணர்ந்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கையை நாம் இன்றிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

அதே நேரத்தில் அண்மைக்காலத்தில் இயற்கையில் பலதரப்பட்ட மாற்றங்கள் பாதிப்புகள் ஏற்படுவது அதேபோல பல்வேறுபட்ட இயற்கை அழிவுகள் ஏற்படுகின்றன. அதேபோல் இயற்கை பேரிடர்களை நாங்கள் சந்தித்திருக்கிறோம்.கடந்த காலங்களை ஒப்பிடும் போது எங்களுடைய இலங்கை தற்போது இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்வதில் நாலாவது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்திற்கு வந்திருக்கின்றது. எமது இலங்கை சிறிய தீவாக இருந்தபோதிலும் நாங்கள் வறட்சி

மற்றும் வெள்ளம் போன்ற பல்வேறு இயற்கை பேரழிவுகளை சந்தித்து வருகின்றோம்.

இயற்கைக்கு நாங்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதே அளவுதான் எமது மானுட இருப்பு பேணப்படும் என்பதுதான் உலக நியதி. இயற்கை அதனுடைய நிலைதனை எண்ணி அதனை எதிர்கொள்ள வேண்டிய நிலை தொடர்பில் நாங்கள் சிந்திக்க வேண்டும்.. இந்த நிலைமைதொடருமாயின் எதிர்கால சமுதாயம் கட்டாயமாக பாதிப்படையும் ஆதலால் நாம் எதிர்கால சமுதாயத்தை சிறந்த ஒரு சமூகமாக உருவாக்குவதற்கு இயற்கை சமநிலையைப் பேண வேண்டியது கட்டாயமான விடயமாகும்.

எனவே இன்றைய தினத்தில் இந்த சுற்றாடல் தினத்தை நினைவு கூறல் மட்டுமல்லாது யாழ் குடாநாட்டில் எவ்வாறு சூழல் சமநிலநிலையினை பாதுகாக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை நாம் இன்றைய தினம் எடுக்க வேண்டும். எனவே இது அனைவருடைய பொறுப்பாகும் என்பதையும் இன்றைய தினத்தில் நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்" என சிறப்புரையில் தெரிவித்துள்ளர்